# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2024

## வளர்தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இலங்கைக்கு முதலில் வந்த ஐரோப்பியர்

அ ) ஆங்கிலேயர் ☐ ஆ ) போர்த்துக்கேயர் ☐

இ ) ஆரியர் ☐ ஈ ) சீனர் ☐

2. 'மறப்பேனா' என்ற பாடலில் தாயைவிட இனியது எனக் குறிப்பிடப்படுவது

அ ) ஒழுக்கம் ☐ ஆ ) பணம் ☐

இ ) தமிழ்மொழி ☐ ஈ ) செல்வம் ☐

3. பின்வருவனவற்றுள் நெட்டெழுத்துகள்

அ ) ஆ,இ,ஊ,எ,ஒ,ஐ,ஓ ☐ ஆ ) ஏ,ஊ,ஐ,ஓ,ஔ,உ,அ ☐

இ ) ஊ,ஈ,ஏ,ஐ,ஓ,ஔ,இ ☐ ஈ ) ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ☐

4. கரிய வண்டுகள் தேனை உறிஞ்சிக் குடித்தன. இதில் வந்துள்ள செயப்படுபொருள்

அ ) தேனை ☐ ஆ ) குடித்தன ☐

இ ) வண்டுகள் ☐ ஈ ) கரிய ☐

5. திராவிட மொழியியலின் தந்தை என அழைக்கப்படுவர்

அ ) பிளேட்டோ ☐ ஆ ) கால்டுவெல் ☐

இ ) எடிசன் ☐ ஈ ) கோமர் ☐

6. கொய்கிறாள் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ ) இன் ☐ ஆ ) கின்று ☐

இ ) கிறு ☐ ஈ ) ப் ☐

7. மன்னார்க் கடலில் முத்துக் குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த அரசு

அ ) கரையோரச்சிங்களஅரசு ☐ ஆ ) கண்டியரசு ☐

இ ) வன்னிக்குறுநிலஅரசு ☐ ஈ ) யாழ்ப்பாணஅரசு ☐

8. எதிர்காலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) பாடுகின்றன ☐ ஆ ) கூவியது ☐

இ ) நடப்பான் ☐ ஈ ) படித்தான் ☐

9. குறள்:

வானோக்கி வாழு முலகெல்லா ____________

கோனோக்கி வாழுங் குடி

அ ) தென்னவன் ☐ ஆ ) மன்னவன் ☐

இ ) என்னவன் ☐ ஈ ) வானவன் ☐

10. கால் + சங்கிலி

அ ) கால்சங்கிலி ☐ ஆ ) கால்ச்சங்கிலி ☐

இ ) காற்ச்சங்கிலி ☐ ஈ ) காற்சங்கிலி ☐

11. இலகு என்பதன் எதிர்ச்சொல்

அ ) கடினம் ☐ ஆ ) உலோபி ☐

இ ) தோல்வி ☐ ஈ ) கோழை ☐

12. வானத்தில் விண்மீன்கள் காணப்படுகின்றன. இது

அ ) தொடர்ச்சொல்லியம் ☐ ஆ ) வினாச்சொல்லியம் ☐

இ ) தனிச்சொல்லியம் ☐ ஈ ) ஏவற்சொல்லியம் ☐

13. காரி என்னும் உழவன் ஔவைக்குக் களைபிடுங்கும்படி கொடுத்த கருவி

அ ) அரிவாள் ☐ ஆ ) கத்தி ☐

இ ) மண்வெட்டி ☐ ஈ ) களைக்கொட்டு ☐

14. "சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை ....." என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) கொன்றைவேந்தன் ☐ ஆ ) மூதுரை ☐

இ ) ஆத்திசூடி ☐ ஈ ) நீதிநெறிவிளக்கம் ☐

15. வாழைக்காய் என்பதைப் பிரித்து எழுதினால்

அ ) வாழைய் + காய் ☐ ஆ ) வாழை + காய் ☐

இ ) வாழைக் + காய் ☐ ஈ ) வாழைய்க் + காய் ☐

16. ____________ ஆம் நூற்றாண்டுகளில் யாழ்குடாவின் மேற்குப் பகுதி மணற்றி என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

அ ) கி.மு 19 ☐ ஆ ) கி.பி 9 ☐

இ ) கி.மு 18 ☐ ஈ ) கி.மு 20 ☐

17. நாங்கள் என்ற சொல் குறிக்கும் இடம்

அ ) படர்க்கை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) தன்மை ☐ ஈ ) ஒருமை ☐

18. கானகம் என்பது

அ ) வானம் ☐ ஆ ) உலகம் ☐

இ ) விண் ☐ ஈ ) காடு ☐

19. யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் தமிழரசு நிலவிய இடங்களில் ஒன்று

அ ) கந்தரோடை ☐ ஆ ) முல்லைத்தீவு ☐

இ ) ஆனையிறவு ☐ ஈ ) வன்னி ☐

20. தேசிகவிநாயகம்பிள்ளை ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் எழுதிய நூல்

அ ) தேம்பாவணி ☐ ஆ ) திருக்குறள் ☐

இ ) ஆசியசோதி ☐ ஈ ) நாலடியார் ☐

21. ஈழம் என்பதன் பொருள்

அ ) வெள்ளி ☐ ஆ ) செப்பு ☐

இ ) இரும்பு ☐ ஈ ) தங்கம் ☐

22. மன்னார்ப்பட்டினம் ______________ கொண்டு விளங்கியது.

அ ) பதைபதைத்து ☐ ஆ ) பேரும்புகழும் ☐

இ ) அக்கம்பக்கம் ☐ ஈ ) அல்லும்பகலும் ☐

23. குமண மன்னன் ஆண்ட மலைப்பகுதி

அ ) பறம்புமலை ☐ ஆ ) குடுமியாமலை ☐

இ ) முதிரைமலை ☐ ஈ ) குமரிமலை ☐

24. முதலெழுத்துகள்

அ ) 12 ☐ ஆ ) 30 ☐

இ ) 18 ☐ ஈ ) 15 ☐

25. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல்

அ ) பேகன் ☐ ஆ ) அதியர்மான் ☐

இ ) ஓரி ☐ ஈ ) பாரி ☐

26. ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது

அ ) குணப்பெயர் ☐ ஆ ) காலப்பெயர் ☐

இ ) பொருட்பெயர் ☐ ஈ ) தொழிற்பெயர் ☐

27. தைப்பொங்கல் அன்று மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பு

அ ) வீரம் ☐ ஆ ) விருந்தோம்பல் ☐

இ ) நாகரிகம் ☐ ஈ ) மானம் ☐

28. அசேலனை வெற்றி கொண்டவன்

அ ) குத்திகன் ☐ ஆ ) துட்டகெமுனு ☐

இ ) எல்லாளன் ☐ ஈ ) சேனன் ☐

29. மல்லிகை ______________ என மணம் வீசியது.

அ ) நறநற ☐ ஆ ) கமகம ☐

இ ) மளமள ☐ ஈ ) கலகல ☐

30. கீரிமலையில் உள்ள பண்டைய சிவன்கோவில்

அ ) தம்பலேசுவரம் ☐ ஆ ) முன்னேச்சுரம் ☐

இ ) கேதீச்சுரம் ☐ ஈ ) கோணேச்சுரம் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

திரிகடுகம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் நல்லாதனார் என்னும் புலவரால் எழுதப்பட்டது. திரிகடுகம் என்பது மூன்று மூலிகைகளைக் குறிக்கும். இம் மூன்று மூலிகைகளும் சுக்கு, மிளகு, திப்பிலி என்பனவாகும். மூன்று மூலிகைகளால் உடல் நலம் பேணுவதைப் போன்று இதிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மூன்று அறக்கருத்துகளும் வாழ்க்கைக்கு நன்மை செய்யும். அதனால் திரிகடுகம் என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் 101 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலானது நாலடியார், திருக்குறள் போன்றவற்றைப் பின்பற்றி எழுதப்பட்டது.

1. திரிகடுகம் என்ற நூலை எழுதியவர் யார்?

______________________________

2. திரிகடுகத்தில் குறிப்பிடப்படும் மூன்று மூலிகைகளும் எவை?

______________________________

______________________________

3. திரிகடுகம் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?

______________________________

4. திரிகடுகம் எந்நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்டது?

______________________________

5. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று எது?

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. நுண்ணுயிரிகள் வாழும் இடங்களில் இரண்டைத் தருக.

_______________________________________________

2. வவுனிக்குளத்தின் முன்னைய பெயர் என்ன?

_______________________________________________

3. பாரிமகளிரைக் காப்பாற்றிய புலவர் யார்?

_______________________________________________

4. மான உணர்வும் ஊக்கமும் உடைய விலங்கு எது எனக் குறளில் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

5. சான்றோர் எனப்படுபவர் யாவர்?

_______________________________________________

6. சங்கிலியன் சிலை எங்கே அமைந்துள்ளது?

_______________________________________________

7. இலங்கைத் தீவு முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஆண்டு எது?

_______________________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.**

## பள்ளி

| | | | | |
|---|---|---|---|---|
| செல்ல | கிழக்கு | துயில் | கரையுது | கண்மலர்வாய் |

கண்ணே எழுந்திடுவாய்
கண்மணியே ____________________
சின்னஞ்சிறு மலரே
____________________ நீங்கி நீ எழுவாய்

காகம் ____________________ பார்
காலையும் ஆனது பார்
____________________ வெளுக்குது பார்
கீழ்வானம் சிவக்குது பார்

பள்ளி ____________________ வேண்டுமல்லோ
பாலரெல்லாம் வந்திடுவார்
பண்புடனே நீ பயின்று
பாரினிலே உயர்ந்திடுவாய்

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

காலைப்பொழுதில் அகிலன் தனது நண்பி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான். வீதியோரத்தில் இருந்த குளம் ஒன்றில் வாத்துகள் நீந்திக் கொண்டிருந்தன. அவன் தொடர்ந்து நடந்து செல்லும் வழியில் தென்னைகளும் பனைகளும் நிறைந்து காணப்பட்டன. அவற்றைப் பார்த்து மகிழ்ந்தவாறு நண்பியின் வீட்டை அடைந்தான்.

1. படர்க்கைச் சொல் ஒன்று தருக.

_______________________________________________

2. இடப்பெயர் ஒன்று எழுதுக.

_______________________________________________

3. பெண்பால் சொல் ஒன்று தருக.

_______________________________________________

4. பலவின்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

5. இறந்தகால வினைமுற்று ஒன்றைத் தருக.

_______________________________________________

6. உயர்திணைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 12

ஆ) தரப்பட்டுள்ள சொல்லியங்களை இறந்தகாலச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

1. பெண்கள் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கின்றனர்.

_______________________________________________

2. குயில் மரத்தில் இருந்து இனிமையாகக் கூவுகின்றது.

_______________________________________________

புள்ளிகள் 03

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மணம் | மனம் | வேலை | வேளை | களைத்து | கலைத்து |

அப்பா தனது ______________ முடித்துவிட்டு ஓய்வாக இருக்கும் ______________ அருகில் உள்ள பூங்காவுக்குச் செல்வார். பூங்காவில் இருக்கும் போது அவரது ______________ மகிழ்ச்சி அடையும். பூங்காவில் உள்ள மலர்களில் இருந்து நறு ______________ காற்றில் பரவும். அங்கு சிறுவர்கள் ஓடி ஆடி விளையாடுவதால் அவர்கள் ______________ க் காணப்படுவர்.

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நான் எங்கள் தோட்டத்திற்குச் சென்றேன். அங்கு பல வண்ண மலர்கள் மலர்ந்திருந்தன. மலர்களில் வண்ணத்துப்பூச்சிகள் தேன் குடித்துக் கொண்டிருந்தன. நான் அவற்றைப் பார்த்து மகிழ்ந்தேன்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 05

## 8) தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பொருத்தமாக இணைக்குக.

| | |
|---|---|
| இனிய நண்பனை ● | ● புல்லைத் தின்னாது. |
| உண்மை சொல்லிக் ● | ● வழி பிறக்கும். |
| விளையும் பயிரை ● | ● கெட்டவன் இல்லை. |
| புலி பசித்தாலும் ● | ● முளையில் தெரியும். |
| தை பிறந்தால் ● | ● இடுக்கணில் அறியலாம். |

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்ப்பாணத் தமிழரசு
- பாரி மகளிர்
- நீர் கலந்து கொண்ட பிறந்தநாள் விழா
- மாலைக்காட்சி

புள்ளிகள் 15